NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 7 July 2015

### சிங்கப்பூரின் கருத்தரிப்பு விகிதத்தை உயர்த்தும் முயற்சி குறித்த ஆய்வு முடிவு

# தம்பதியரை ஊக்குவிக்க அதிகம் செய்யப்படலாம்

குழந்தைகளைப் பெற்றெடுக்க தம்பதியர்களை ஊக்குவிக்கும் வகையில் கூடுதலாகப் பல முயற்சிகளை எடுக்கலாம் என்றும் குறிப்பாக 30களில் உள்ள பெண்களுக்கு இந்த உதவியை வழங்கலாம் என்றும் கொள்கை ஆய்வுக் கழகம் நடத்திய ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளது.

சிங்கப்பூரின் மேம்படுத்தப்பட்ட திருமணம், பெற்றோர் தொகுப்புத் திட்டம் எந்த அளவுக்குப் பயனுடையதாக இருக்கிறது என்பதைக் கண்டறிய இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

சிங்கப்பூரின் கருத்தரிப்பு விகிதத்தை உயர்த்த தொகுப்புத் திட்டம் 2013ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்டது.

2001ஆம் ஆண்டிலிருந்து திருமணம், பெற்றோர் தொகுப்புத் திட்டத்துக்கான வரவுசெலவுத் திட்டம் நான்கு மடங்கு அதிகரித்து உள்ளது.

$500 மில்லியனாக இருந்த தொகை 2013ஆம் ஆண்டில் $2 பில்லியனாக உயர்ந்தது.

குழந்தைப் பேறை ஊக்குவிக்கும் புதிய திட்டங்களில் வீடு வாங்க, புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு மெடிசேவ் மானியம், தந்தையர் விடுப்பு, தாய் மற்றும் தந்தை பகிர்ந்துகொள்ளும் விடுப்பு போன்ற சலுகைகளை வழங்கும் பெற்றோர் முன்னுரிமைத் திட்டமும் ஒன்று.

இருப்பினும், சிங்கப்பூரின் கருத்தரிப்பு விகிதம் எதிர்பார்த்த அளவுக்கு உயரவில்லை. கருத்தரிப்பு விகிதம் தற்போது 1.25ஆக உள்ளது. 1977ஆம் ஆண்டிலிருந்து இந்த விகிதம் மிகவும் குறைவான அளவில் இருந்து வருகிறது.

"கடந்த 15 ஆண்டுகளில் பல விஷயங்கள் மாறியுள்ளன. மக்களின், குறிப்பாகப் பெண்களின் கல்விநிலை வெகுவாக உயர்ந்து உள்ளது. அவர்களது எதிர்பார்ப்புகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு உள்ளன," என்று கொள்கை ஆய்வுக் கழகத்தைச் சேர்ந்த ஆய்வுத் துறை கல்வியாளர் திரு கிறிஸ்டஃபர் கீ கூறினார்.

கழகம் நடத்திய ஆய்வில் ஆண்களும் பெண்களுமாக 2,000 பேர் பங்கெடுத்தனர். ஆய்வில் கலந்துகொண்டவர்கள் 21 வயதுக்கும் 49 வயதுக்கும் இடைப்பட்டவர்கள். தந்தையர் விடுப்புகளைப் எடுத்திருக்காத ஆடவர்களில் பாதிப் பேர் இந்த விடுப்புகள் குழந்தை பெற்றெடுப்பது குறித்து தங்கள் குடும்பம் கொண்டுள்ள முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று தெரிவித்தனர்.

ஆனால் இம்மாதிரியான சலுகைகள் குழந்தை பெறுவது தொடர்பாக எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்தாது என்று ஆய்வில் பங்கெடுத்த பெண்களில் 60 விழுக்காட்டினர் கூறினர்.

தந்தையர் விடுப்பு எடுத்துள்ள ஆண்களில் 65 விழுக்காட்டினர் அச்சலுகைகள் நல்ல ஊக்குவிப்பாக அமையும் என்று குறிப்பிட்டனர்.

தந்தையர் விடுப்பு எடுத்துள்ள ஆண்களின் மனைவியரில் 64 விழுக்காட்டினர் இந்தச் சலுகைகளை வரவேற்றனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.